ஞாலகுருவின் படைப்புக்கள்

மெய்யான இந்துமத ஆண்டு 43,73,127 ஆடி மாதம்

# இந்துவேத முன்னேற்றக் கழகம் என்கின்ற ஆன்மீகக் கழகம்



இந்துவேத நாயகம், இந்துமதத் தந்தை, இந்துவேத
இந்துமதத் தலைமை ஆச்சாரிய குருபீடம்
அந்தணர் அண்ணல், ஞானச்சாரியார்,
ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரர் அவர்கள்

இந்து இலக்கியக் கழக வெளியீடு

## 43,73,127ஆம் ஆண்டின் ஆடி மாத வெளியீடு

## *__தலைப்பு:-__* "இ.மு.க. என்கின்ற ஆன்மீகக் கழகம்"

# __உள்ளுறை__


1. **"பதினெண்சித்தர் மடத்தின் செயல்நிலைகள்"** - நாகர்கோயில் வட்டாரத்தில் உள்ள ஐந்தவா (இந்து) சேவா சங்கத்தின் பொதுச்செயலாளருக்கு குருதேவர் ஞானாச்சாரியார் அவர்களின் தலைமைப்பீடம் சனவரி 1995இல் விடுத்த விளக்க அஞ்சல்.
2. **"ஞானாச்சாரியாரின் நாகர்கோயில் சுற்றுப்பயணம்"** - ஞானாச்சாரியாரின் சுற்றுப்பயணம் தொடர்பாக குருதேவர் ஞானாச்சாரியார் அவர்கள் தமது அவைத் தலைவருக்கு சுற்றுப்பயணத் திட்டத்தின் மாற்றம் தொடர்பாக பிப்ரவரி 1995இல் எழுதிய விளக்க அஞ்சல்.
3. **"இந்துவேத முன்னேற்றக் கழகம் என்கின்ற ஆன்மீகக் கழகம்"** - மதுரையைச் சேர்ந்த புதிய அடியார் ஒருவருக்கு இந்துவேத முன்னேற்றக் கழகத்தின் செயல்பாடுகள் குறித்து குருதேவர் ஞானாச்சாரியார் அவர்கள் ஆகசுட்டு 1995இல் விடுத்த நெடிய அஞ்சல் வடிவக் கட்டுரை.

# பதினெண்சித்தர் மடத்தின் செயல்நிலைகள்

இடம்: பொன்னேரி,
நாள்: 10-1-1995.

அனுப்புநர்:
சித்தர் சட்டநாதர்,
சித்தர் தேரையர், பதினெண்சித்தர் மடம் அறக்கட்டளை,
3, தென்றல், N.G.O.நகர், பொன்னேரி - 601204

பெறுநர்:
தவத்திரு, திருவருட்செல்வர் திரு S. இராசரத்தினம்
வழக்கறிஞர், பொதுச் செயலாளர், ஐந்தவா (இந்து) சேவா சங்கம்,
இராதாகிருட்டிணபுரம், நெய்யூர் அஞ்சல், Pincode - 629802.

(**தொடர்பு**):- நேற்று 9-1-1995 அன்று இரவு 9:15 மணியளவில் சித்தர் சட்டநாதர் தொலைபேசியில் தொடர்பு கொண்டு தெரிவித்த செய்திகளின் தொடர்பாக விடுக்கும் திருவோலை.

திருவருட்செல்வர் இராசரத்தினம் B.A., B.L., அவர்கட்கு,

(1) குருமகா சன்னிதானம், அந்தணர் அண்ணல், ஞானச்சாரியார் அவர்களின் வாழ்த்து தெரிவித்து விடுக்கப்படும் திருவோலை.

(2) நான் தங்களோடு தொலைபேசியில் பேசி தங்களுடைய ஒப்புதலை குருபீடத்தில் தெரிவித்தேன். குருபீடம் மிகவும் மகிழ்ந்து பாராட்டினர்.

(3) குருபீடம் எங்கு வருவதானாலும் குறைந்தது ஒரு நாளைக்கு முன்பாகவாவது திருமடத்திலிருந்து செல்லுகின்ற ஊர் வரையுள்ள இடங்களின் கோயில்கள், ஆலயங்கள் முதலியவற்றிற்கெல்லாம் அருளுலக அறிவிப்புச் செய்து பூசை செய்து புறப்படுவதுதான் மரபு. ஏனெனில், இவ்வையகத்தில் ஆதிசிவனாரால் தோற்றுவிக்கப்பட்ட திருமடம் இது. எனவே, இத் திருமடத்தின் குருபீடம் ஆதிசிவனாரின் திருத்தோற்றமாக, வாரிசாகக் கருதப்படுகிறது. இதனால் வழிநெடுக உள்ள அருளுலகத்தாருக்கு தாம் எழுந்தருளுவது பற்றி அறிவிப்பு செய்தேயாக வேண்டும்.

(4) இதன் அடிப்படையில் குறைந்தது கன்னியாகுமரி மாவட்டம் முழுவதுமாவது பதினெண்சித்தர் மடத்தைச் சேர்ந்த சன்னிதானங்கள் அருளுலக அறிவிப்புப் பயணம் செய்ய வேண்டியிருக்கிறது. இது தொடர்பாக தங்களின் மூலமாக கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள இந்துமதக் கோயில்கள், ஆலயங்கள், ஆசிரமங்கள், மடங்கள், சபைகள், சங்கங்கள் முதலிய நிறுவன நிர்வாகங்களைப் பற்றிய ஒரு தெளிவான குறிப்பும், வழிகாட்டலும், அறிமுக உதவியும் கிடைத்தால் நல்லது. இது பற்றி, குருபீடம் தங்களுக்கு உடனடியாக - மிகத் தெளிவான திருவோலை அனுப்புமாறு குருவாணை வழங்கியதால் இத்திருவோலை தீட்டப்படுகிறது.

(5) இன்றைய நிலையில் நமது இந்துமதத்திலுள்ள மடாதிபதிகளில் அல்லது துறவிகளில் அல்லது மதத் தலைவர்களில் யாருமே பாதிப்புற்ற மக்களுக்கு மந்திரிப்பதில்லை, பாதிப்பைப் பற்றி அருட்கணிப்பு கூறி தேவையான பரிகாரங்களைச் செய்வதில்லை. இதேபோல், அருள்நலம் குன்றிய கோயில்களுக்கு, ஆலயங்களுக்கு அதனுடைய காரணகாரியங்களை ஆராய்ந்து புத்துயிர்ப்புப் பணி, குடமுழுக்குப் பணி, அருளேற்றித் தரும் பணி முதலியவற்றைச் செய்வதில்லை.... ஆனால், இவற்றை செய்வதற்காகவேதான் பதினெண்சித்தர் மடம் இருக்கிறது. ஏனென்றால் இருக்கு வேதம், அசுர வேதம், அதர்வான

வேதம், யாம வேதம் எனும் நான்கு வேதங்களும் பதினெண்சித்தர் மடத்தில்தான் இருக்கின்றன.

(6) பதினெண்சித்தர் மடத்தில்தான் மேற்படி நான்கு வேதங்களின் அடிப்படையில் (1) திருப்பதி சக்கரங்கள் 108, (2) சத்தி பீடச் சக்கரங்கள் 243, (3) சீவாலயச் சக்கரங்கள் 1008 என்று மூன்று வகைப்பட்ட சக்கரங்களும் முறைப்படி தயாரிக்கும் சன்னிதானங்கள், ஆதீனங்கள், தம்பிரான்கள், ஆச்சாரியார்கள், ஏமகோடி பீடாதிபதிகள், காமகோடி பீடாதிபதிகள், சோமகோடி பீடாதிபதிகள், வாமகோடி பீடாதிபதிகள் ... முதலிய 48 வகைப்பட்ட அருளாளர்களும், அருட்கலைஞர்கள் 64 வகைப்பட்டவர்களும் இருக்கிறார்கள். எனவேதான், **பதினெண்சித்தர் மடம் இலைமறை காயாகவே இருந்து வருகிறது**.

(7) அரை நூற்றாண்டு காலத்துக்கு மேலாக ஆதிசிவனாரின் நேரடி குருபாரம்பரிய வாரிசான பதினெண்சித்தர் மடாதிபதி ... வெளியுலகு ஆரவாரத்தில் ஈடுபடாமல் முழுமையாக அருட்பணி ஆற்றியதால்தான், இமயத்தின் விளிம்பு முதல் கன்னியாகுமரி கடலடி மணற்பரப்பு வரை இந்துக்கள் நம்பிக்கையோடு வழிபட அருளாற்றல் மிக்க கருவறைகள், வெட்டவெளிக் கருவறைகள், வழிபாட்டு நிலையக் கருவறைகள், கோயில் மூலக் கருவறைகள், உண்ணாழிகள், ஆலய வளாகங்கள், சமாதுகள் ... முதலியவை செழுச்சியாக இருக்கின்றன. ஆனால், நாட்டிலுள்ள பெரும்பாலான சமய சமுதாய அரசியல்வாதிகள் தங்களை நாத்திகர்களாக, மதச் சார்பின்மையுடையவர்களாக, இந்துமதத்தில் அதிக ஈடுபாடு இல்லாதவர்களாக, மாற்று மதங்களை மதித்து போற்றிப் பேணிடுபவர்களாக ... நடித்து வாழுகிறார்கள்! நடித்து வாழுகிறார்கள்!! நடித்து வாழுகிறார்கள்!!! நடித்தே வாழுகிறார்கள்!!!!....

(8) மேற்படி காரணத்தால்தான் இந்துமதம் வேலியற்ற பயிராக, நாதியற்ற அனாதையாக, அன்னிய மதங்களின் வேட்டைப் பொருளாக மாறி விட்டது! மாறி விட்டது!! மாறி விட்டது!!! மாறியே விட்டது!!!!

(9) இப்பேருண்மையினை இந்துவேத இந்துமத தலைமை ஆச்சாரிய குருபீடமான அந்தணர் அண்ணல், ஞானாச்சாரியார் அவர்கள்தான் முறையாகவும், நிறைவாகவும் எல்லாவகையான சான்றுகளோடும், ஊன்றுகளோடும் மெய்ப்பித்து அனைத்து இந்துமதத் தலைவர்களிடமும் அறிவிப்புச் செய்தார்.

(10) இந்தியாவிலுள்ள இந்துமத நிறுவன நிர்வாகங்கள் அனைத்தும் குருபீடத்தின் அறிவிப்பை வரவேற்றுச் செயல்பட முன்வரவில்லை. இருந்த போதிலும் அண்மைக்கால அயோத்தி இராமர் கோயில் நிகழ்ச்சியை அடுத்து குருபீடம் **இந்துமதத்தின் பெயரால் உள்ள சமுதாயக் கட்சிகள், அமைப்புகள், சமய அமைப்புகள், அரசியல் அமைப்புகள், தனிப்பட்ட அருளாளர்கள், இந்துமதக் காப்பாளர்கள், இந்துமத இலக்கியவாதிகள், இந்து மதக் கலைஞர்கள் ... முதலிய அனைவருடனும் தொடர்பு கொண்டிட்டது குருபீடம். ஆனால், உருப்படியான பயன் விளையவில்லை.**

(11) இவற்றால்தான், குருபீடம் திருமடத்துச் சித்தர்களை நாடு முழுதும் அனுப்பி பொதுமக்களை சந்திக்கும் திட்டத்தை உருவாக்கியது. இதன் மூலம் (1) இந்து மறுமலர்ச்சி இயக்கம் [இ.ம.இ. I.M.I.] என்ற மத நிறுவனத்தையும், (2) இந்துவேத முன்னேற்றக் கழகம் [இ.மு.க. I.M.K.] என்ற அரசியல் நிறுவனத்தையும், (3) அருட்பணி விரிவாக்கத் திட்டம் [அ.வி.தி.] என்ற சமுதாய நிறுவனத்தையும் தோற்றுவித்துள்ளார். இந்த சமுதாய நிறுவனத்தின் மூலம் இந்துவேத அடிப்படையில் மக்களின் நோய்நிலை, பேய்நிலை, மாய்நிலை, ஓய்நிலை, தேய்நிலை, தெய்வநிலை ... முதலியவற்றிற்கேற்ப தேவையான வழிகாட்டல்களையும், பரிகாரங்களையும் வழங்கக் கூடிய அருட்பட்டத்தவர்களை பரவலாக நாடு முழுதும் கிராமம் கிராமமாக, ஊர் ஊராக உருவாக்கும் பணி துவக்கப்பட்டிருக்கிறது. இதற்காக ஆங்காங்கே யாகசாலையுடைய அருட்கோட்டம், பதினெண்சித்தர் மடத்தின் கிளை அலுவலகங்கள் தோற்றுவிக்கப்பட்டு வருகின்றன.

(12) இப்படிப்பட்ட செயல்நிலைகள் பதினெண்சித்தர் மடத்தில் இருக்கின்றன. இவற்றைப் பற்றி இன்றைய இந்துமத சமய சமுதாய அரசியல் கலை இலக்கியவாதிகள் பதினெண்சித்தர் மடத்தை சரியாகப் புரிந்து கொள்ளாமல் புறக்கணித்து, ஒதுக்கி, மறைத்து வருகிறார்கள். இப்பேருண்மை தங்களுக்கு முழுமையாக தெளிவாக்கப்பட்டிடல் வேண்டும் என்று குருபீடம் குருவாணை வழங்கியிருக்கிறது. இது பற்றி, நாங்களும் தங்களிடம் நேரடியாகவே "குருபீடம் தங்களுடைய நிகழ்ச்சிக்கு வரவழைக்கப்படுவது; பிறரின் தலையீட்டால் நிறுத்தப்பட நேரிடுமா!?" என்று கேட்டோம். நீங்களும், "அப்படி யாருக்கும் கட்டுப்பட்டதல்ல இந்த நிறுவனம்" - என்று கூறினீர்கள். இதை குருபீடத்திடம் தெரிவித்தோம்.

(13) குருபீடம், திருவருட்செல்வர் திரு S. இராசரத்தினம் அவர்களுக்கு "நம்மால் தொல்லைகள் ஏற்பட்டு விடக் கூடாது" - என்று கூறியதால்தான் இந்நெடிய திருவோலை அனுப்பப்பட்டுள்ளது.

(14) திருவருட்செல்வர் திரு S. இராசரத்தினம் அவர்களே! குருபீடத்தோடு குறைந்தது 10 பேர்களுக்கு மேல் ஆட்கள் வருவார்கள். மற்றபடி சித்தர்கள், சன்னிதானங்கள் சிலர் வரக்கூடும். குருபீடம், குருபீடத்தோடு வருபவர்கள் எல்லோரும் குடும்பத்தோடு வருவார்கள்.

**குறிப்பு**:- <u>பதினெண்சித்தர் மடத்து மடாதிபதிகள் மட்டும்தான் இந்துமதத்தில் இல்லறத்தில் வாழ்பவர்கள்</u> - என்ற நிலை இருக்கிறது. ஏனெனில் இந்துவேதத்தில் காவி கட்டி துறவி வாழ்க்கை வாழும் சாமியார்களை, மடாதிபதிகளை, பீடாதிபதிகளை, ஆச்சாரியார்களை, குருபீடங்களை, ... குறிப்பிடவில்லை. மேலும் இல்லற வாழ்வு இல்லாதவர்கள் பிறர்க்கு அருள் வழங்கவும், பூசைகள் செய்யவும் கூடாது என்றே கண்டிக்கிறது இந்து வேதம்.

(15) இப்படி பதினெண்சித்தர் மடம் பற்றிய விவரங்கள் இன்றைய இந்துக்களுக்கு புதியவைகளாக இருக்கின்ற நிலை இருப்பதால்;

குருபீடம் ஏதேனும் ஒரு வீட்டில் மடத்தைச் சேர்ந்தவர்களோடு தங்குவதற்கு ஏற்பாடு செய்தால் நல்லது. அதாவது, வெள்ளி, சனி, ஞாயிறு (10, 11, 12 மார்ச்சு) ஆகிய மூன்று நாட்களிலும் பதினெண்சித்தர் மடத்தைச் சேர்ந்தவர்கள்; மண்டைக்காடு கிராமத்திலோ அல்லது அதன் அருகிலோ ஒரு வாடகை வீட்டில் அல்லது தங்களது அமைப்பைச் சேர்ந்த யாராவது ஒருவரது வீட்டில் தங்குவதற்கு ஏற்பாடு செய்தால் நல்லது. ஏனெனில்,

(I) குருபீடம் இந்துமதத்தில் அதிக ஈடுபாடு உள்ளவர்களையெல்லாம் சந்திக்க விரும்புகிறது.

(II) குருபீடம் விரும்புகிறவர்களுக்கு தீட்சை தர; சாதி வேறுபாடு இன்றி பூணூல் அணிவித்திட, உருத்திராக்கம் அணிவித்திட; சித்தி பூசைக்கு சத்தி வழங்கி, இந்துக்களுக்கு மந்தரித்து அருள் வழங்கும் அருட்பட்டத்தவரை உருவாக்கிட விரும்புகிறது.

(III) குருபீடம் விழா நிகழ்ச்சிகளில்; தமது <u>உடல்நலத்துக்கேற்ப</u> முழுமையாகக் கலந்து இந்துக்களிடையே ஒற்றுமையுணர்வு, பற்றுணர்வு, தோழமையுணர்வு, நட்புணர்வு ஒன்றி ஊறிச் செயல்படும் பண்பு; இந்துமதத்தின் மீது நம்பிக்கை, இந்துமத நிறுவன நிர்வாகங்களின் மீது மதிப்பு; இந்துமத மறுப்பாளர்களை வெறுப்பாளர்களை எதிர்ப்பாளர்களை எல்லாம் சந்தித்திடும் துணிவு; இந்துமத மடமைகளையும் போலிகளையும் காலிகளையும், .... கண்டித்துத் திருத்தும் தெளிவு; இந்துமத புராண ஆபாசங்களை வரலாற்று அடிப்படையில் மறுத்து விளக்குதல்; இந்து வேதத்தை இந்துக்கள் எல்லோரும் தெரிந்து கொள்ளச் செய்தல்; ... முதலியவற்றை உருவாக்கிட விரும்புகிறது. இதற்காக கன்னியாகுமரி மாவட்ட முதன்மையானவர்களை சந்திக்க விரும்புகிறது.

(IV) **இந்துக்களுக்கு இந்துமதம் ஏன்? எதற்காக? எப்பொழுது? எங்கே? எவரால்? தோற்றுவிக்கப்பட்டது ... என்ற பேருண்மையை மண்டைக்காடு பகவதியம்மன் திருவிழாவிற்கு வருகின்ற மக்களில்**

**பெரும்பாலானவர்களாவது தெரிந்து கொள்ளும்படி செய்ய வேண்டும் என்பதே குருபீடத்தின் விருப்பம்.** இதற்கான முயற்சியை சிறப்பாகச் செய்ய மண்டைக்காட்டிலேயே தங்கினுல்தான் சிறப்பாகச் செய்ய முடியும் என்று கருதுகிறது குருபீடம்.

(16) திருவருட்செல்வர் திரு S. இராசரத்தினம் அவர்களே! குருபீடம் தங்குவதற்காக நீங்கள் செய்யக்கூடிய ஏற்பாடுகளை முன்கூட்டியே தெளிவாகக் குருபீடத்திற்கு எழுதுங்கள். மேலும், குருபீடம் எங்கு வருவதென்ருலும்; திருமடத்திலிருந்து சித்தர்களும், சன்னிதானங்களும் முன்கூட்டியே அந்த குறிப்பிட்ட இடத்திற்கு பலமுறை எழுந்தருள்வார்கள். கூடுமானவரை குருபீடத்தை வரவழைக்கும் நிறுவன நிர்வாகத்தினர் அனைவரையும் நேரில் சந்திப்பார்கள். குருபீடம் அருளுரையாற்றும் ஊரிலும், ஊரின் சுற்று வட்டாரங்களிலும் அருட்பணி ஆற்றுவார்கள். மக்களுக்கு குருபீடத்தின் வருகையை அறிவிப்பார்கள். எனவே, தாங்கள் இதை சிறப்பாக நிகழ்ந்தேறிட உதவ வேண்டும். அன்புகூர்ந்து திருமடத்திலிருந்து வருபவர்களை வரவேற்று; எங்கெங்கு செல்ல வேண்டும்? யார்யாரைக் காண வேண்டும்? என்பதை அறிவித்து உதவுங்கள்.

(17) தங்களுடைய திருவிழாவில் முறைப்படி ரூ.250/- செலுத்தி வாடகைக்கு எடுக்கப்படும் கடையில்; (i) முடிகயிறு, (ii) உருத்திராக்கம், (iii) சக்கரம் முதலியவைகளை புத்தகங்களோடு சேர்த்து பொதுமக்களுக்கு வழங்கிடும் பணி நிகழ்த்தலாமா என்பதை தெரிவியுங்கள்.

(18) தங்களுடைய திருவிழாவில் திருமடத்தைச் சேர்ந்த சன்னிதானங்கள், ஆதினங்கள், தம்பிரான்கள், சித்தர்கள், ... அன்ருடம் ஒருவர் இருவராவது அரை மணிநேரம் அல்லது ஒரு மணி நேரமாவது இந்து வேதம், இந்துமதம் பற்றி; பதினெண்சித்தர் மடம் பற்றி; இந்துமத விழாக்கள் பற்றி; இந்துக்களின் ஒற்றுமை பற்றி ... அருளுரை ஆற்றலாமா?

(19) இப்படி மிக விரிவான அஞ்சல் எழுதி பதினெண்சித்தர் மடத்தைப் பற்றி உங்களுடைய திருவிழாக் குழுவினர் தெரிந்து கொள்ளும் வண்ணம் திருவோலை தீட்டப்பட்டிருக்கிறது. இதேபோல், பகவதி அம்மன் திருவிழாக் குழுவினர், ஐந்தவா (இந்து) சேவா சங்கம் பற்றிய காலக்கணக்கீட்டு வரலாறு குருபீடத்திற்கு அனுப்பப்பட்டால் நல்லது. மேலும், இந்த ஐந்தவா (இந்து) சேவா சங்கம் பற்றிய முழு விவரங்களையும் குருபீடம் தெரிந்து கொள்ள விரும்புகிறது. ஏனெனில் இந்த நிறுவனத்தின் மூலம் - **'மாற்று மதங்கள் மலிந்துள்ள தென்மாவட்டங்களில் ஊர் ஊராக பதினெண்சித்தர் மடத்துப் பணிகள் நிகழ்த்தப்பட்டால் நல்லது'** என்று குருபீடம் கருதுகிறது. மற்றவை தங்களின் மேலான பதில் கண்டு.

ஓம் திருச்சிற்றம்பலம் ஓம்!

குறிப்பு:- இதை பேழு நகல் எழுதி குருபீடத்திற்கு அனுப்பவும்.

**அன்புள்ள**
**சித்தர் சட்டநாதர்,**
**சித்தர் தேரையர்.**

*{இந்து முன்னேற்றக் கழகம் Letter padஇல் எழுதப்பட்ட அஞ்சல்}*

**//உண்மை நகல்//**

**//இதன் மூலநகல்: கையெழுத்துப் பிறதியாகக் கிடைத்தது. யாருடைய கையெழுத்து என்ற குறிப்பு இறுதியில் இல்லை.//**

இடம்: பொன்னேரி,
நாள்: 7-2-1995.

# ஞாருச்சாரியாரின் நாகர்கோயில் சுற்றுப்பயணம்

குருவே துணை.

*நேரில் கொடுத்தனுப்பி விவாதிக்கும் குறிப்பு ஓலை*

அனுப்புநர்:

ஞாருச்சாரியார்,
எண் 3, N.G.O.Nagar,
பொன்னேரி - 601204.

பெறுநர்:

அவைத்தலைவர்
சித்தர் மூங்கிலடியார்.

நேரில் கொண்டு வருபவர்: சித்தர் அம்பலக்கூத்தர்,

1. அன்பு மகனே! நள்ளிரவு 6-2-1995 11:35 மணி அளவில், பெரியகுளத்து ஐயாவும், பாலசுப்பிரமணிய ஐயாவும் கூறிய செய்திகளைக் கேட்டு எழுந்து முடிவெடுத்தது. அதாவது, சுமார் இரவு 10:45 மணியிலிருந்து மேற்படி இருவரும் செய்திகளைச் சொல்லியிருக்கிறார்கள். மிகத் தொலைவிலிருந்து செய்திகளைச் சொல்லியதால், செய்திகள் மிகத் தெளிவாகக் கேட்கவில்லை. மீண்டும் நள்ளிரவு கடந்து 2:20 மணிக்கு மிகத் தெளிவாக, பாலசுப்பிரமணியத்திடமிருந்து செய்திகள் வந்தன. அச்செய்திகளால், பாலசுப்பிரமணியத்தோடு விவாதம் நடத்தி 3:40 மணியளவில் கீழ்க்கண்ட முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளன.

இவை பற்றி உலகியலாக உன்னோடு பேச விரும்புகிறேன். எனவே, இந்த ஓலை அனுப்பப்படுகிறது.

குறிப்பு:- நீ பொன்னேரி வருவதோ அல்லது நான் சென்னை வருவதோ சிரமமாக இருக்கும் என்பதால் இத்திருவோலையை எடுத்துக் கொண்டு சித்தர் அம்பலக் கூத்தரை அனுப்புகிறோம் யாம்.

2. தொலைபேசியில் ஐந்தவா சங்கப் பொதுச் செயலாளர் கூறியதை விட எமது மண்டைக்காடு வருகை பலராலும் கடுமையாக எதிர்க்கப் படுகிறது.

3. கிறித்தவர்கள் - இந்துக்கள் சண்டையை சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு R.S.S., இந்து முன்னணி, V.H.P., B.J.P., .... முதலியவர்கள் மாயவரத்தில் நமது சன்னிதானங்களை எதிர்த்தது போல; Police மூலம் (Jail) சிறையில் அடைக்க ஏற்பாடு செய்தது போல; பல்வேறு வகையான தொல்லைகளை நமக்குக் கொடுப்பார்கள். அதுமட்டுமல்ல, மேற்படி இயக்கங்களின் வெறி பிடித்த தொண்டர்கள் அனைவரும் அகில இந்திய அளவில் இங்கு ஒன்று சேருவதால்

(1) "தமிழில்தான் இந்துவேதம் இருக்கிறது."
(2) "தமிழன்தான் இந்துவேத தலைமை ஆச்சாரியார்."
(3) "தமிழன்தான் இந்துவேத நாயகம்."
(4) "தமிழன்தான் இந்துமதத் தந்தை."
(5) "ஆதிசிவனார் தமிழ்மொழியில்தான் வேதத்தை அருளினார்."
(6) "மனு தரும சாத்தரங்கள் தமிழில்தான் இருக்கின்றன."
(7) "தமிழ் மொழியில்தான் ஐந்தீ வளர்க்க வேண்டும், முத்தீ ஓம்ப வேண்டும்."
(8) "அந்தணர் எனப்படுபவர்கள் தமிழர்களே."
(9) "சிவன் கோயில்கள் மட்டும் பாழடைந்தது ஏன்?"
(10) "சிவ மதமே சைவ மதம்."
(11) "63 நாயன்மார்களும் தமிழர்களே."

(12) “64 முறை திருவிளையாடல்கள் நிகழ்த்திய சிவபெருமான்கள் தமிழில்தான் பேசினார்கள்.”

(13) “12 ஆழ்வார்களும் தமிழ் மொழியில்தான் பாடியுள்ளார்கள்.”

(14) “96 தொகையடியார்களும் தமிழர்களே.”

(15) “பிறப்பியல், வரியியல், பெயரியல், அங்கவியல், மனையியல் அனைத்தும் தமிழ்மொழியில்தான் இருக்கின்றன.”

(16) “தமிழ்மொழியில் உள்ள காயந்திரி மந்திரங்களை ஓதினால் ஒரு மண்டல கால அளவிலேயே பயன் தெரியும்.”

(17) “தமிழ்மொழியில்தான் எல்லாக் கடவுள்களுக்கும், தேவர் தேவதைகளுக்கும், தெய்வங்களுக்கும், ஆண்டவர்களுக்கும் காயந்திரி மந்தர, மந்திர, மந்திறங்கள் இருக்கின்றன.”

(18) “மனிதரை கடவுளாக்கும் பூசைமொழி தமிழ்மொழியில்தான் உள்ளது.”

(*19) **“இமயம் முதல் குமரி வரை உள்ள எல்லா இந்துக் கோயில்களிலும் உள்ள கடவுள்களுக்கு தமிழ்மொழி நன்றாகத் தெரியும்.”**

(*20) **“மேலும் எல்லாக் கோயில்களிலும் உள்ள சக்கரங்கள் எல்லாம் தமிழ்மொழியில் எழுதப்பட்டவைதான்.”**

(*21) **“இந்து வேதத்தையும், இந்து மதத்தையும் அருளிய பதினெண்சித்தர்கள் தமிழர்களே.”**

(*) இந்த மூன்று பேருண்மைகளால் ‘தமிழ்மொழியில்தான் எல்லா கோயில்களிலும் பூசை செய்ய வேண்டும், அருட்சினை செய்ய வேண்டும். அப்படி தமிழ்மொழியில் பூசை செய்யாததால்தான் இந்துக் கோயில்கள் பாழடைந்தன. இந்துக்கள் மாற்றுமதக் கோயில்களுக்குச் சென்று வழிபாடு செய்ய ஆரம்பித்தனர்’ என்பது தெளிவாகிறது.

(22) “தமிழ்மொழியிலுள்ள காயந்திரி மந்தர, மந்திர, மந்திறங்களால்தான் கங்கணம் (முடிகயிறு), பாதுகாப்புக் கயிறு, குளிசம், சக்கரம், உருத்திராக்கம் ... முதலியவற்றிற்கு சத்தியைத் தர முடியும்.”

(23) "தமிழ்மொழியிலுள்ள காயந்திரி மந்தர, மந்திர, மந்திறங்களால்தான் தீட்சை அருள முடியும், பூணூல் அணிவிக்க முடியும், ஞானக்காட்சி சித்தி தரமுடியும், தவத்தில் ஆழ்ந்து ஈடுபட முடியும்."

(24) "தமிழில் உள்ள காயந்திரி மந்தர, மந்திர, மந்திறங்களைப் பயன்படுத்தாததால்தான் மாற்றுமத மந்திரவாதிகளிடம் இந்துக்கள் மந்திரித்துக் கொள்வதும், முடிகயிறு தாயத்து சக்கரம் வாங்குவதும் தோன்றி வளர்ந்தன."

(25) "வேத சுலோகங்களும், சுருதி ஆரண ஆகம மீமாம்சைகளும் தமிழ்மொழியில்தான் இருக்கின்றன."

...... என்ற கருத்துக்களையெல்லாம் ஞானாச்சாரியார் கூறுகிறார்.

இவற்றை, மண்டைக்காடு பகவதியம்மன் கோயிலில் கூறினால், மிகப்பெரிய செல்வாக்கு பதினெண்சித்தர் மடத்திற்கு, பீடத்திற்கு ஏற்பட்டு விடும்.

4. அதனால், ஞானாச்சாரியாரின் இ.மு.க. (I.M.K.)வும், இ.ம.இ. (I.M.I.)யும் மிகப் பெரிய வளர்ச்சிகளை அடைய நேரிடும். அவை நமக்கு போட்டியாக புதிய தொல்லையாக அமைந்துவிடும். எனவே, ஞானாச்சாரியாரை மண்டைக்காடு திருவிழாவில் பேச விடக் கூடாது என்று மிகப் பெரிய அளவில் தீர்மானங்கள் எடுக்கப்பட்டிருக்கின்றன, முடிவுகள் எடுக்கப்பட்டிருக்கின்றன.

5. நேற்று, ஐந்தவா சங்கத்தவர்களிடையே மிகப் பெரிய அளவில் சலசலப்பும், கருத்து மோதுதல்களும், வாய்ச்சண்டை சச்சரவுகளும், குழப்பங்களும் உருவாகி விட்டன. இவை காட்டுத் தீ போல் எங்கும் பரவ ஆரம்பித்து விட்டன.

6. அதாவது, ஞானாச்சாரியார் வந்தால், மண்டைக்காடு பகவதி திருவிழாவில் 1982இல் நடந்தது போல் மிகப் பெரிய கலவரங்கள்,

சண்டை சச்சரவுகள், அடிதடிகள், துப்பாக்கிச் சூடுகள் முதலியவைகள் ஏற்பட்டு கன்னியாகுமரி மாவட்ட அமைதியே பாதிக்கப் படலாம்.

7. "அநேகமாக ஞானச்சாரியார் வந்தால் உயிரோடு திரும்ப மாட்டார்" என்ற வாசகம் ஐந்தவா சங்கத்தவர்களிடையேயும், பொதுமக்களிடையேயும் கடலலை போல் ஓயாமல் ஒலிக்கவாரம்பித்து விட்டன. இதனால் நேற்று மதியமே பெரும்பாலான மக்கள், "ஞானச்சாரியார் மண்டைக்காடு பகவதி திருவிழாவிற்கு வர வேண்டாம்; அப்படி ஞானச்சாரியார் வந்தால் அவருக்கும் தொல்லை, அவரால் மக்களுக்கும் தொல்லைதான் மிஞ்சும்" என்று பேச ஆரம்பித்து விட்டார்கள். இதே முடிவிற்கு ஐந்தவா சேவா சங்கத்தினரும் வந்துவிட்டார்கள். விரைவில் நமக்குத் தெரிவிப்பார்கள்.

8. எனவே, இன்றிரவு சித்தர் அம்பலக் கூத்தர் அனுப்பப்படுகிறார். மதுரையில் கேசவன், முடிந்தால் செகதீசன், கட்டாயம் துரை இருவரையும் அழைத்துக் கொண்டு, முழுமையான சன்னிதான உடையில் நேராக நாகர்கோயில் சென்று T.R.பாலகிருட்டிணன், கனகானந்த சாமிகள் (பத்தன்காடு), கும்மிடிப்பூண்டி சுப்பிரமணி முதலியவர்களோடு திங்கள் சந்தை சென்று ஐந்தவா சங்க பொதுச் செயலாளரைச் சந்தித்து:-

"உங்களுக்கு தொல்லை வேண்டாம். ஞானச்சாரியாருக்காக March 11ஆம் தேதி சனிக்கிழமை ஒரு நாள் மட்டும் அருளுரையாற்ற ஏற்பாடு செய்தால் போதும். அதுவும் முடியாதென்றால் கவலையில்லை. ஞானச்சாரியார் மண்டைக்காடு திருவிழாவில் அருளுரை ஆற்றும் நிகழ்ச்சியை நீக்கி விடுங்கள். ஞானச்சாரியார் தமது சொந்த செலவில் மண்டைக்காடு வந்து திருவிழாவில் கலந்து பகவதியம்மனை வழிபட்டுச் செல்லுவார்.

ஆனால், பதினெண்சித்தர் மடத்தின் சார்பாக உள்ள புத்தகக் கடையிலும், பதினெண்சித்தர் மடத்து சித்தர்களாலும், ஆச்சாரியார்களாலும், சன்னிதானங்களாலும், ஆதீனங்களாலும்,

தம்பிரான்களாலும், இந்து வேதத்திலிருந்து எடுக்கப்பட்ட பகவதியம்மன் காயந்திரி மந்தர, மந்திர, மந்திறங்களும், சித்தர் இடைக்காடரின் காயந்திரி மந்தரம் மட்டும் முழுமையாக அச்சிடப்பட்டு; இவற்றிற்குரிய விளக்கங்களோடு வெளியிடப்படும் ‘மண்டைக்காடு பகவதியம்மன் காயந்திரி மந்தரம், மந்திரம், மந்திறம்’ என்ற புத்தகம் விற்பனை செய்யப்படும். அத்துடன் ஞானச்சாரியாரின் இந்துவேத இந்துமத கருத்துச் சுருக்கங்கள் அச்சிட்ட அறிக்கைகள் வழங்கப்படும். இவற்றிற்கு மட்டுமாவது ஐந்தவா சங்கம் ஆதரவு அளித்தால் போதும்.

அதாவது, பதினெண்சித்தர் மடத்திலிருந்து ரூ.250/- ஐந்தவா சங்க General Secretary & Advocate இராசரத்தினம் (வக்கீல்) அவர்களிடம் கொடுக்கப்பட்டு ஐந்தவா சங்க மாநாட்டு வளாகத்தில் உறுதி செய்யப்பட்ட புத்தகக் கடை மறுக்கப்பட வேண்டாம். அங்கு ஏற்றப்பட்டுள்ள மெய்ஞ்ஞானக்கொடியான சிவலிங்கக் கொடி இறக்கப்பட வேண்டாம். ஏனெனில், “சிவலிங்கக் கொடியை இறக்குவது இந்துமதத்திற்கு மிகப்பெரிய அவமானத்தை, கேவலத்தை தரும்” என்ற செய்திகளை ஐந்தவா சங்கத்தார்களுக்குத் தெரிவிப்பார் சித்தர் அம்பலக் கூத்தர்.

9. கேசவனும் துரையும் 9-2-1995 வியாழக்கிழமையில் திருச்செந்தூரில் உள்ள மலையாளசாமி மடத்திற்கு வரக்கூடிய பத்தர்களை, இந்துமதப் பிரமுகர்களை சந்தித்து விட்டு வேலைக்கு திரும்பி விடட்டும். அதன்பிறகு, சித்தர் அம்பலக் கூத்தர் சுமார் ஐந்தாறு நாட்கள் அல்லது 19-2-1995 ஞாயிறு குளச்சலில் நடக்கும் நிகழ்ச்சி வரை சுற்றுப்பயணம் செய்வார்.

இது பற்றிய முடிவை அங்குள்ள சூழ்நிலைக்கேற்ப எடுப்பார்.

10. இவை பற்றி உடனடியாக கேசவனுக்கு தொலைபேசியில் புதன்காலை அங்கு வரும் அம்பலக் கூத்தருடன் கூடுமானவரை கேசவன் கன்னியாகுமரி செல்ல வேண்டும் என்று கூறு. இதேபோல், அம்பலக்கூத்தர் கன்னியாகுமரியில் இருக்கும் வரை முன்பு சபரிமலையில்

சித்தர் அம்பலக்கூத்தர் தங்கியிருக்கும் போது அவருக்குத் துணையாக மதுரையிலிருந்து சன்னிதானங்கள் மாற்று ஏற்பாடுகள் மூலம் ஒவ்வொருவராக சென்றது போல் கன்னியாகுமரி செல்லட்டும்.

11. திட்டமிட்டது போல் March 9 வியாழன் யாம் (ஞானச்சாரியார்) நாகர்கோயில் புறப்படுகிறோம். 10ந் தேதி வெள்ளி குளச்சல் வட்டார மக்களிடையே அ.வி.தி. பணி, அருளுரையாற்றல்; மத விளக்கு ஊர்வலத்தோடு வேனில் மண்டைக்காடு சென்று அம்மனை வழிபட்டு விட்டு நாகர்கோயில் திரும்புகிறோம். சனி பகல் நாகர்கோயில் வட்டாரம், மாலை மண்டைக்காடு திருவிழாவிலும் கலந்து கொள்கிறோம். 12ந் தேதி ஞாயிறு பத்தன்காடு, கனகசபை - இசக்கி கோயிலில் திருவிழா.... பிறகு நெல்லை நிகழ்ச்சிகளில் தேவைக்கேற்ப கலந்து சென்னை திரும்புகிறோம்.

12. மதுரை ஆதீனம் நமது மடத்தைப் பற்றிக் கூறிய குற்றச்சாட்டு உண்மையா? விவரங்களை சீனுவிடம் கூறவும்.

13. இப்பொழுது 10ந் தேதி நாகர்கோயில் வருவதால் மீண்டும் 17ந் தேதி தேரையருடன் நாகர்கோயில் 18, 19 நிகழ்ச்சிக்கு உன்னால் (மூங்கிலடியார்) வர முடியுமா?

14. அன்பு மகனே! அவசர அவசியமாக அருளாட்சி அழைப்பு (0786) அறிக்கை 5000 அச்சிட்டு 9ந் தேதி நீ செல்லும்போது எடுத்துச் சென்றால் துரை, அம்பலக்கூத்தர், சட்டநாதர் ஆகியோருக்கு கன்னியாகுமரி பயணத்தின் போது பயன்படும்.

15. மண்டைக்காடு பகவதி காயந்திரி எழுதி முடிக்கப்பட்டு விட்டது. உரிய விளக்கங்களை சுருக்கமாக 50 பக்கம் நானே எழுதி விடுவேன். எனவே Computer type-ல் offset அடித்துவிட முடிவு செய்துள்ளோம். நீ திட்டமிட்டபடி இந்துவேத சிந்தனை 1000 அடித்துவிடு. அவை மண்டைக்காடு, தஞ்சை கோயில், மாரிக்கனி மூலம் புத்தகம் விற்கப்பட்டு உடன் பணம் அனுப்பப்படும். கேசவனுக்கு

ஐயப்பன் காயந்திரி பணம் திருப்பித் தரப்பட்டது போல் உனக்கும் தரப்படும்.

புத்தக விலை ரூ.20/- என்று போடவும். அப்பொழுதுதான் கட்டுப்படியாகும்.

இதேபோல், அருளாட்சி அழைப்பு அறிக்கைக்கு நிதி வசூல் செய்வோம். கவலை வேண்டாம்.

*(இதற்குக் கீழே உள்ளவை குருதேவர் அவர்களின் கையெழுத்தில் இருந்திட்டது.)*

**அன்பு மகனே! முடிந்தால் என்னைச் சந்திக்க இவ்வாரத்துக்குள் வா. நான் அம்பத்தூர் இவ்வாரம் வர இயலாது. -**

**அன்புத் தந்தை**
**அந்தணர் அண்ணல்,**
**ஞானாச்சாரியார்,**
**தலைவர், குருதேவர், ஞானத்தந்தை,**
**7/2/95.**
**அதிகாலை 6.10 மணி.**

**இரவு முழுதும் உறங்கவில்லை.**

**இதைப் புரிந்து விரிந்து விரைந்து செயல்படுக.**

**அன்பு சித்தர்,**
**7/2/95.**

**//உண்மை நகல்//**
**//இதன் மூலநகல் : சித்தரடியார் திரு இரா. சீனிவாசன் அவர்களின் கையெழுத்தில் இருந்தது. அஞ்சலின் இறுதியில் குருதேவர் அவர்களின் கையெழுத்தில் ஒரு பத்தியும், சுருக்கக் கட்டளைகளும் இருந்தன.//**

# இந்துவேத முன்னேற்றக் கழகம் என்கின்ற ஆன்மீகக் கழகம்

[*இந்த நகலின் முதல் பக்கம் மட்டும் கிடைத்த நகலில் இல்லை. இரண்டாவது பக்கத்திலிருந்து தொடங்குகிறது.*]

(3) ஆனால்! ஆனால்!! ஆனால்!!! அண்டபேரண்ட அருட்பேரரசர் தங்களைப் பார்த்ததுமே தங்களை அருட்படைத் தளபதிகளுள் ஒருவர் என்று தீர்மானம் செய்து விட்டார். அதிலும் குறிப்பாக தங்களுடைய துணைவியார் மித்ரா அவர்கள் மடப்புரத்தில் இரண்டு பெரிய குதிரைகளுக்கிடையில் நிற்கின்ற ஆத்தாள் தேவி மடப்புரம் காளியாகவே காட்சியளித்தார். அது கண்டு அதிர்ச்சியுற்றார் ஞானவேந்தர், ஞாலகுரு அந்தணர் அண்ணல், ஞானாச்சாரியார். எனவே, முதன்முறையாக அறிமுகமாகின்ற தாங்கள் மிகப் பெரிய புண்ணியம் செய்தவர். முதல் யுகத்திலேயே ஆதிசிவனாராக சித்தர் அரசயோகிக் கருவூரார் அண்டபேரண்டங்களிலிருந்து இம்மண்ணுலகுக்கு வந்த காலத்தில் தாங்களும் அவரோடு வந்த 48 வகைச் சித்தர்களுள் ஒருவராக இருந்தீர்கள் என்பதேயாகும்.

<u>குறிப்பு</u>:- அதாவது இம்மண்ணுலகில் பயிரினங்களும், உயிரினங்களும் தோன்றிய பிறகுதான் இவற்றிற்கெல்லாம் தலைவராக (மண் + தலைவர் = மண் + ஈசர் = மணீசர்) '<u>மணீசர்கள்</u>' தோன்றினார்கள். இந்த மணீசர்கள் மற்ற விலங்குகளைப் போலவே விலங்குகளோடு விலங்காகவே வாழ்ந்திட்டார்கள். அப்படிப்பட்ட காலத்தில்தான் அண்டபேரண்டங்களிலிருந்து <u>அனாதிக்காலத்திற்</u>குரிய முதல் பதினெண்சித்தர் பீடாதிபதி இந்த மண்ணுலகிலிருந்த மணீசர்களைப் பண்பட்ட மனதையுடைய மனிதர்களாக மாற்றுவதற்கு

அனுப்பப்பட்டிட்டார் அண்டபேரண்டத்தவர்களால். இதுபோல் அஞ்ஞதிக்காலம் எனப்படுகின்ற (4,85,920) நான்கு இலட்சத்து எண்பத்தையாயிரத்து தொள்ளாயிரத்து இருபது ஆண்டுகள் ஆயின மனிதனைப் பண்படுத்திட.

ஏனென்றால், இந்த உலகில் முதன்முதல் தோன்றிய இளமுறியாக் கண்டமெனும் குமரிக் கண்டம் 7000 கல் தொலைவிற்கு பரந்து விரிந்து கிடந்தது. இந்த கண்டத்தின் கிழக்கிலும், தெற்கிலும், மேற்கிலுமாக மூன்று பெரிய வானளாவிய பனிமூடிய இமய மலைகள் இருந்தன. அவை உருகி மூன்று பக்கங்களிலிருந்தும் ஓடி வந்த வெள்ளப் பெருக்கு பல்லாயிரக்கணக்கான ஆறுகளாக குறுக்கும், நெடுக்கும் குமரிக் கண்டம் முழுதும் ஓடின. இதனால் இளமுறியாக் கண்டமெனும் குமரிக் கண்டம் நூறாயிரக் கணக்கான சிறிய பெரிய தீவுகளாகவே இருந்தன. இந்த தண்ணீர் வளத்தால் குமரிக்கண்டம் அடர்ந்த காடுகள் நிறைந்த கண்டமாகவே இருந்தது. இந்த நிலை தெற்கேயிருந்து வடக்கு நோக்கி 6000 கல் தொலைவிற்குத்தான் இருந்தது. அதற்குப் பிறகு விந்திய மலை வரை வறண்ட குறுங்காடுகளும், மணல் வெளிகளும், கற்பாறைகளும் மிகுந்திருந்தன.

இப்படிப்பட்ட அடர்ந்த காடுகள் மிகுந்த இளமுறியாக் கண்டத்து மக்களைத் திருத்த (4,85,920) ஆண்டுகள் ஆனது அதிகமல்ல. ஆனால், <u>7000 கல் பரப்பளவில் இருந்திட்ட மக்களைத் திருத்த இந்த 4,85,920 ஆண்டுகளில் பல்லாயிரக் கணக்கான அஞ்ஞதி சிவன்கள் வந்தார்கள்</u>. அவர்கள் மணீசர்களாக அதாவது மண்ணுலகிலிருந்த பயிரினங்களுக்கும், உயிரினங்களுக்கும் தலைவர்களாக, மிருகங்களோடு மிருகங்களாக வாழ்ந்த நிலையை மாற்றுவதற்கு இம்மண்ணுலகுக்கு வந்திட்ட பல்லாயிரக் கணக்கான அஞ்ஞதிசிவன்களும் <u>'இம்மண்ணுலகுக்குரிய நீதிநெறிகளை' எடுத்துக் கூறினார்கள் என்பதால் இந்த அஞ்ஞதிக்கால சிவன்கள் அனைவருமே "மனுநீதியார்"</u> என்றே பெயரிட்டு அழைக்கப்படலானார்கள். இதற்குப் பிறகுதான் இந்த மனுநீதியார்கள்

கூறிய அல்லது எழுதியவைகளின் தொகுப்புதான் மனுநீதி நூல்கள் என்ற பெயரில் 18 நூல்கள்தான் உருவாயின. இதற்குப் பெயர்தான் மனுநீதி நூல்கள் 18. இவற்றில் 18,00,000 சுருதிகள் எனப்படும் கருத்து வாசகங்களாக இருக்கின்றன. இந்த 18,00,000 சுருதிகளாலும் மனிசர்களை முழுமையாகப் பண்பட்ட மனிதர்களாக மாற்ற முடியவில்லை.

அதற்காகத்தான் 4,85,920 ஆண்டுகளுக்குப் பிறகு அண்டபேரண்டங்களிலிருந்து 'ஆதிசிவன்' அனுப்பப்பட்டார். இந்த ஆதிசிவனுருக்குத் துணையாக; - முன்பு அனாதிசிவன்களுக்கு துணையாக (1) 33,000 கோடி தேவர்கள், (2) 48,000 கோடி இருடிகள், (3) 1,000 கோடி தேவதைகள், (4) 96,000 கோடி கணங்கள், (5) 108,000 கோடி முனிவர்கள் என்று ஐந்து வகைப்பட்டவர்களும் அனுப்பப்பட்டார்கள். எனவே, இப்பொழுது இந்துவேத நாயகம், இந்துமதத் தந்தை, கருகுல ஆதீனம், கருமூலப் பண்டாரம், நான்குயுக நாயகம் என்ற சிறப்புக்குரிய ஆதிசிவன் இம்மண்ணுலகுக்கு வரும்பொழுது (1) பதினெண்சித்தர்கள் குழு, (2) பதினெட்டாம்படிக் கருப்புகள் குழு, (3) நாற்பத்தெட்டு (48) வகைப்பட்ட கடவுளர்கள், (4) 48 வகைப்பட்ட வழிபடுநிலையினர்கள், (5) 48 வகைப்பட்ட சித்தர்கள் அனுப்பப்பட்டார்கள் அண்டபேரண்டத்தவர்களால். இப்படி வந்திட்ட விண்வெளி ஐம்பெருங்குழுவில்தான் தாங்களும் ஒருவராக அதாவது 48 வகைப்பட்ட சித்தர்களில் ஒருவராக இம்மண்ணுலகுக்கு வந்து சேர்ந்தீர்கள்.

(4) அன்பு நண்ப! முக்காலமும் உணர வல்ல நமது குருபீடம் தங்களை மதுரை மீனாட்சியம்மன் கோவில் ஆடி வீதியிலுள்ள தாத்தா சித்தர் செம்பருத்தியார் அவர்களின் சன்னிதானத்தில் சந்தித்த பொழுதே தாங்கள் ஒரு சித்தர் என்பதையும், தங்களுடைய மனைவி ஆத்தாள் தேவி மடப்புரம் காளியின் அம்சம் என்பதையும் புரிந்து கொண்டார். எனவேதான், உங்கள் இருவருக்கும் சன்னிதானப் பட்டங்கள் மட்டும் வழங்கி அடுத்தடுத்து தம்மோடு தொடர்பு கொள்ளும்படி கூறினர். ஆனால், தாங்களோ சற்று காலதாமதமாகவே

வந்து சேர்ந்திருக்கிறீர்கள். அதனுல் தங்களுடைய வளர்ச்சியிலும், முதிர்ச்சியிலும் சற்று காலதாமதமாகும். அவ்வளவுதான். இனிமேலாவது தாங்கள் அடிக்கடி சென்னையிலுள்ள குருபீடத்தோடும், மதுரையில் கீழவெளி வீதியில் நெல்பேட்டை கடை எண்: 266, கேசவன் ஏசன்சீஸ் எனும் உரக்கடையில் உரிமையாளரான நாயன்மார் நால்வரின் திருத்தோன்றல், சித்தர் வேதகணநாதர், சித்தர் எண்வகையார், சித்தரடியார் த.கேசவன், B.Com., அவர்கள் குருபீடத்தின் பதிலியாக இருப்பதால் அவரையும் அடிக்கடி சந்தியுங்கள். இதுதான் உரிய பக்குவ காலம்.

(5) அன்பு நண்ப! ஆதிசிவனுர் முதல் இன்றைக்கு ஆதிசிவனுரின் திருத்தோன்றலாக, இந்துவேத நாயகமாக, அருளாட்சி நாயகமாக, ஞானவள்ளலாக வாழுகின்ற குருமகா சன்னிதானம் ஞாலகுரு சித்தர் அந்தணர் அண்ணல், ஞானுச்சாரியார் அவர்கள் வரையிலும்; எல்லா குருபீடங்களும் முறையாக திருமணம் செய்து கொண்டு வாழ்ந்தவர்கள்தான்; வாழுகின்றவர்கள்தான். எனவே, நாட்டு நடப்பில் நமது இந்துவேத முன்னேற்றக் கழகத்துக்கும், குவலய குருபீடமான நமது குருதேவருக்கும் எண்ணற்ற எதிரிகள், பகைவர்கள், துரோகிகள், விரோதிகள் இருக்கின்றுர்கள். அவர்கள் தங்களைப் போன்று புதிதாக சேருபவர்களிடம்; “இந்த வயதிலேயே சிவப்பு வேட்டி கட்ட வேண்டுமா?, உருத்திராக்கங்கள் அணிய வேண்டுமா?, சாமியாராக போக வேண்டுமா?, உலக இன்பங்களையெல்லாம் துறக்க வேண்டுமா? நன்றுக வாழ வேண்டிய வயதில் இப்படி சாமியார் கோலம் தேவையா?” என்றெல்லாம் உங்களையும், உங்களுடைய தோழர்களையும் கேள்வி மேல் கேள்விகளைக் கேட்டு குழப்பிட முயற்சிப்பார்கள். ஆனுல் நீங்கள் யாரும் குழம்பிடவோ, கலங்கிடவோ தேவையில்லை.

மதுரையிலேயே வாழுகின்ற “எங்களது குருதேவரின் அடியார்கள் இருக்கிறுர்கள். அவர்களைச் சென்று பாருங்கள். அவர்கள் எல்லோரும் வெள்ளை வேட்டி சட்டை, பேண்ட் சர்ட் அணிந்து கொண்டு

மனைவி மக்களோடு இனிமையான இல்லற வாழ்க்கை வாழ்ந்து கொண்டுதான் இருக்கிறார்கள். பூசைக்கு செல்லுகின்ற நேரத்தில் மட்டும் சன்னிதான உடை ஆகிய நாலு முழ சிவப்பு வேட்டி குறுக்காக மடித்து இடுப்பிலும், அதன்மேல் 7 முழ நீளமுள்ள மஞ்சள் துணியை இடுப்பில் கச்சாக கட்டிக் கொள்வதும், 8 முழ சிவப்பு வண்ணத் துணியில் தலைப்பாகை கட்டிக் கொள்வதும், கையில் திரிசூலமோ, மெய்ஞ்ஞானக்கொடியோ வைத்துக் கொள்வதும் மக்களுக்கு அருள் வழங்குவதற்காக கையில் மயிற்பீலியும் வைத்துக் கொண்டு பூசைக்குரிய நேரத்தில் மட்டும் அப்படிச் செயல்பட்டுவிட்டு பூசை முடிந்ததும் இவற்றையெல்லாம் அகற்றிவிட்டு விருப்பம் போல் எந்த கலர் வேட்டி, பேண்ட், சர்ட்டும் அணிந்து கொள்ளலாம்" என்று மிகத் தெளிவான பதிலை எளிய முறையில் கூறக் கற்றுக் கொள்ளத் தெரிய வேண்டும்.

**<u>குறிப்பு</u>**:- நண்ப! காமராசு அவர்களே தாங்களும் தங்களுடைய தோழர்களும், ஆதரவாளர்களும் இந்துமத, இந்துவேத தமிழின, தமிழ்மொழி, தமிழ்நாட்டுத் துரோகிகளிடமும், எதிரிகளிடமும் மிகமிக எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்பதற்காகத்தான் இப்படிப்பட்ட விரிவான அஞ்சல் எழுதப்பட்டிருக்கின்றது. அதாவது, தாங்களும் தங்களுடைய <u>நண்பர்களும், தோழர்களும்</u> நமது எதிரிகளுக்கு எப்படிப் பதில் சொல்ல வேண்டுமென்பதற்காகத்தான்; தங்களுக்கு எவருக்கும் எப்படி பதில் சொல்ல வேண்டும் என்பதற்காக மேலே எழுதிக் காட்டியிருக்கின்றார்.

(6) இனிய நண்ப! காமராசரே! தாங்கள் மிகமிகத் தெளிவாகவும், தயக்க மயக்கமின்றியும், எவ்வித தேக்கமுமின்றி எல்லோரிடமும் பேச வேண்டுமென்று குருபீடம் விரும்புகிறது. அதாவது, தாங்களும் தங்களது நண்பர்களும், தோழர்களும், "எங்களது குருதேவர் M.A., Ph.D., படித்தவர்; இந்தியா முழுவதும் சுற்றியவர்; உலகை அருளுலக ரீதியாக எவ்விதமான சட்டதிட்டக் கட்டுப்பாடுமின்றி சுற்றி வந்தவர்;

தமிழ்மொழியின் தந்தை, தமிழினத்தின் பாதுகாவலர், தமிழ்நாட்டின் உரிமைகளேயும், பெருமைகளேயும் மீட்டுத் தரும் வல்லமை பெற்றவர். தன்னம்பிக்கையிழந்து இன்று நடக்கும் அரசியல் கொடுமைகள் கண்டு அஞ்சி நடுநடுங்கிக் கொண்டிருக்கக் கூடிய அப்பாவி ஏழை எளிய பாமர மக்களுக்கு தன்னம்பிக்கையூட்டி அருட்படை திரட்டி வருகின்றவர். இதற்காகவே இ.மு.க. = I.M.K. = இந்துவேத முன்னேற்றக் கழகம் என்ற ஆன்மீக கழகத்தை உருவாக்கியிருக்கின்றுர். இந்த ஆன்மீகக் கழகம் மிக விரைவில் ஆண்டி முதல் அரசன் வரை எல்லாவித அச்சமும், கூச்சமும், நடுக்கமும், ஏக்கமும், தேக்கமும், முடக்கமும் பெற்று மனம் தளர்ந்து வாய்விட்டே புலம்பக் கூடிய அவலநிலேயைத் தடுப்பதற்காகச் செயல்படும். பல நூறுயிரக்கணக்கானவர் இடம் பெற்றுள்ள அமைப்பு இ.மு.க. என்ற ஒன்று. இன்றைய நிலேயில் '<u>அரசியலுக்கு ஆன்மீகம் தேவையில்லே</u>' எனும் கருத்தை ஏற்றுக் கொள்கிருர் எங்களது குருதேவர். ஆனுல், '<u>ஆன்மீகத்திற்கு அரசியல் தேவைப்படுகிறது</u>'. எனவே, மிக விரைவில் எங்களது குருதேவர் இ.மு.க. எனும் நிறுவன நிர்வாகத்தை அரசியல் கட்சியாக மாற்ற இருக்கின்றுர். வருகிற தேர்தலில் எல்லாத் தொகுதிகளிலுமே இ.மு.க.வின் சார்பில் M.L.A.க்களும், M.P.க்களும் (எம்.எல்.ஏ.க்களும், எம்.பி.க்களும்) நிறுத்தப்படுவார்கள்.

"அப்பொழுதுதான் தமிழ்மொழி, தமிழினம், தமிழ்நாடு என்ற முக்கோணக் கோட்டைக்குட்பட்டதுதான் இந்துமதம்; இந்துவேதமும், இந்துமதமும் பிறந்தது தமிழ்நாட்டில்தான்; இந்துவேத நூல்களும், இந்துமத நூல்களும் முதன்முதல் வெளியிடப்பட்டது தமிழ்மொழியில்தான், தமிழ்நாட்டில்தான்; என்ற பேருண்மைகள் வெளிக் கொணரப்பட முடியும். அதன்மூலம்தான், தமிழனுக்கு தன்னம்பிக்கையும், தன்மானப் பிடிப்பும் ஏற்படும். இந்துவேதத்தில் சாதி இல்லே என்ற பேருண்மையை விளக்குவதன் மூலம்தான் தமிழர்களே ஒற்றுமைப்படுத்த முடியும், ஒன்றுபடுத்த முடியும்.

அதாவது, தமிழ்மொழிதான் இந்துவேத, இந்துமத, அருளாட்சி மொழி; அதேபோல தமிழகம்தான், தமிழ்நாடுதான் இந்துவேதத்துக்கும், இந்துமதத்துக்கும் பிறந்த வீடு; தமிழர்கள்தான் இந்துவேதத்துக்கும், இந்துமதத்துக்கும் மூலவர்கள், காவலர்கள், வாரிசுகள், தத்துவ வித்துக்கள் என்ற பேருண்மை உலகம் முழுதும் தெரிவிக்கப்பட வேண்டுமென்றால் இ.மு.க. தேர்தல் களத்தில் இறங்காமல் முடியாது. இ.மு.க. தேர்தலில் இறங்கும் பொழுதுதான் அரை நூற்றாண்டுக் காலமாக, குருதேவரின் 10ஆவது ஆண்டிலிருந்து ஆரம்பிக்கப்பட்ட இ.மு.க. இன்றைக்கு குருதேவருக்கு அறுபது ஆண்டாகியும் ஊருக்கு நாலைந்து பேர்கள், பேரூர்க்குப் பத்து இருபது பேர்கள் என்று தமிழகத்துக்குள் சில நூறாயிரம் பேர்கள்தான் இ.மு.க.வின் தொண்டர்களாகியிருக்கிறார்கள். இனியும் பொறுத்திருக்க இயலாது.

எப்படியாவது தமிழர்களின் உள்ளங்களும், இல்லங்களும்தான் ஆதிசிவனார் அருளிய இந்து வேதத்துக்கும், இந்து மதத்துக்கும் நாற்றங்கால்கள், விதைப் பண்ணைகள், நாற்றுப் பண்ணைகள், தானியக் குவியலைச் சேர்த்து வைக்கும் நெற்களஞ்சியங்கள் என்ற பேருண்மையை முதலில் தமிழர்களும், அடுத்து தமிழ்நாட்டைச் சேர்ந்த கேரளத்தவர்களும், ஆந்திராவைச் சேர்ந்தவர்களும், கன்னட மொழியைச் சேர்ந்த மைசூர்க்காரர்களும்; அதற்குப் பிறகு படிப்படியாக வடநாட்டார்களும், ஆசியாக் கண்டத்தினர்களும், மற்ற நான்கு கண்டத்தவர்களும் புரிந்து கொள்ளும்படிச் செய்யப்பட்டிட வேண்டும்! செய்யப்பட்டிட வேண்டும்!! செய்யப்பட்டிட வேண்டும்!!! செய்யப்பட்டேயாக வேண்டும்!!!!

ஆனால், தமிழ் வாழ்க! தமிழ் வளர்க! தமிழ் வெல்க! எங்கும் தமிழ்! எல்லாவற்றிலும் தமிழ்! என்ற முழக்கங்களை அரசியல்வாதிகள் தேர்தலில் வாக்குகளைப் பெறுவதற்காகப் பயன்படுத்திய சூதாட்ட வாசகங்களேயாகும். இன்னும் சொல்லப் போனால், தமிழன் புகழைச் சொல்லி தேர்தலில் வாக்குகளைப் பெற்றவர்கள்தான் தமிழுக்கு மிகப்

பெரிய துரோகிகளாக, எதிரிகளாக, பகைவர்களாக தமிழை விற்கவும், ஒத்தி வைக்கவும், அடமானம் வைக்கவும், மிகப்பெரிய எதிரிகளின் கங்காணிகளாகவும், அன்னிய மதத்தவர்களின் கைக்கூலிகளாகவும் செயல்பட்டிட்டார்கள்! செயல்பட்டிட்டார்கள்!! செயல்பட்டிட்டார்கள்!!!

அதாவது, தமிழின் பேரால் ஆட்சிக்கு வந்தவர்கள்தான் ஆங்கில மொழிக்கும், இந்தி மொழிக்கும் ஆரத்தி எடுத்து வரவேற்றுர்கள், வரவேற்கிறுர்கள். இதேபோல் திரைப்படத் துறையிலும், தொலைக்காட்சித் துறையிலும் தோன்றுகின்ற ஆண்களும் பெண்களும் மேலைய நாட்டுப் பாணியிலே உடை உடுத்தி, உணவு உண்டு, உறவுமுறைகளை ஏற்படுத்திக் கொண்டு, கலாச்சாரப் புரட்சி என்ற பெயரால் தமிழ்ப் பண்பாட்டை அழிப்பதோடு; தமிழகத்தின் ஒழுக்கம், பழக்கவழக்கங்கள், நம்பிக்கைகள், மரபுகள், சடங்குகள், சாத்தரங்கள், சாத்திரங்கள், சாத்திறங்கள், நீதிநெறிகள், தன்மான உணர்வு, தமிழன் என்ற உணர்வு முதலிய அனைத்தையுமே பெருமளவில் சிதைத்து சீரழித்து விட்டார்கள். இன்னும் சிறிதுகாலம் சென்று விடுமேயென்றுல்; தமிழன், தமிழ்மொழி, தமிழினம், தமிழ்நாடு என்ற பெயர்களுக்குரிய மக்களையோ, வாழ்வியல்களையோ தமிழ்நாட்டில் பார்க்க முடியாது! பார்க்க முடியாது!! பார்க்க முடியாது!!! பார்க்கவே முடியாது!!!!

(7) இனிய நண்ப! காமராசரே! நம் நாட்டின் வியாபாரத் துறையிலும், தொழில்துறையிலும் பெரிய பெரிய ஆலைகள் கட்டுவதிலும் தமிழர்கள் அல்லாதவர்கள்தான் தமிழ்நாட்டில் செய்கிறுர்கள். அதாவது, தமிழ்நாட்டின் பொருளாதாரத் துறை முழுவதுமே தமிழரல்லாதவர்கள் கைக்குப் போய்க் கொண்டிருக்கிறது. இதேநிலை நீடித்துக் கொண்டு போனுல் தமிழ்நாடு என்ற பெயரே மாற்றப்பட்டு விடும். தமிழர்களே தங்களுடைய வாழ்வியல் நெறிமுறைகள் அனைத்தையும் அன்னிய நாடுகளுக்கு உரியனவாக மாற்றிக் கொண்டு விடுவார்கள். அதன்பிறகு, நமது சங்க இலக்கியங்களான பதினெண்மேல் கணக்கு நூல்கள், பதினெண்மையக் கணக்கு நூல்கள், பதினெண்கீழ்க் கணக்கு நூல்கள்,

கம்பராமாயணம், கலிங்கத்துப் பரணி, பெரியபுராணம், நாயன்மார்கள் பாடிய தேவார திருவாசகங்களும், ஆழ்வார்கள் பாடிய நாலாயிரத் திவ்விய பிரபந்தங்களும் முழுக்க முழுக்க படிப்பவர்கள் இல்லாமல் இறந்தே போக நேரிடும்! இறந்தே போக நேரிடும்!! இறந்தே போக நேரிடும்!!! அத்தகைய ஒரு இழிநிலை, பழிநிலை எக்காரணத்தை முன்னிட்டும் உருவாகிவிடக் கூடாது! உருவாகிவிடக் கூடாது!! உருவாகிவிடக் கூடாது!!! உருவாகிவிடக் கூடவே கூடாது!!!!

இந்துவேத முன்னேற்றக் கழகம் இந்துமத முன்னேற்றக் கழகமாகவும்; இந்துக்களின் முன்னேற்றக் கழகமாகவும்; இந்துவேதத்தை மண்ணுலகுக்கு அருளிய தமிழ்மொழியின் முன்னேற்றக் கழகமாகவும்; இந்துமதத்தை மண்ணுலகுக்கு பரப்பிட்ட தமிழ் இனத்தவர்களின் முன்னேற்றக் கழகமாகவும்; இந்துமதத்தின் பிறப்பிடமாகவும், இருப்பிடமாகவும், காப்பிடமாகவும், பாதுகாப்புப் பெட்டகமாகவும் இருக்கின்ற தமிழ்நாட்டின் முன்னேற்றக் கழகம் ஆகவும்; இந்துமதத் தத்துவங்களையும், செயல் சித்தாந்தங்களையும், பூசைவிதிகளையும், பூசை நெறிமுறைகளையும், பூசைக்குரிய மந்தர, மந்திர, மந்திற, மாந்தர, மாந்தரீகங்களையும் காப்பாற்றுகின்ற முன்னேற்றக் கழகமாகவும் இருந்திடும்! இருந்திடும்!! இருந்திடும்!!!

அதாவது, இன்றைக்கு தமிழ்நாட்டில் சாலைகளில் போவோர் வருவோரைப் பார்த்தால் நூற்றுக்கு ஒருவர் அல்லது இருவர்தான் தமிழனுக்குரிய உடை உடுத்தியிருக்கிறார்கள். இதேபோல தமிழ்நாட்டிலுள்ள உணவகங்களையும், ஜவுளிக் [*துணிக்*] கடைகளையும் சென்று பார்த்திட்டால் நூற்றில் பத்தில் ஒரு பங்கு கூட தமிழ்நாட்டு பண்பாட்டுக்குரியவைகளாக இல்லை. தமிழனின் தமிழ்நாட்டுக் குக்கிராமம் முதல் மிகப்பெரிய நகரம் வரை உள்ள கடைவீதிகளில் சுற்றி வந்தால் தமிழனுக்கு என்று உள்ள தமிழனின் கடைகளை விரல்விட்டு எண்ணிவிடலாம்! விரல்விட்டு எண்ணி விடலாம்!! விரல்விட்டு எண்ணி விடலாம்!!! எனவே, இப்படிப்பட்ட மாபெரும் வீழ்ச்சி

நிலையை, இகழ்ச்சி நிலையை, தாழ்ச்சி நிலையை இனியும் அனுமதிக்கக் கூடாது என்பதற்காகத்தான் இ.மு.க. நேரடி அரசியலில் இறங்குகிறது.

இ.மு.க. அருளாட்சி அமைத்தால்தான் தமிழ்நாட்டிலுள்ள அன்னிய ஆதிக்கங்கள், அன்னிய ஊடுருவல்கள் முதலியவைகளைத் தடுத்து நிறுத்தி; தமிழன் தமிழச்சியின் தன்மானம், தன்னம்பிக்கையைக் காப்பாற்றிட முடியும். அத்துடன் தமிழர்களையெல்லாம் தன்மான உணர்வு, இனமான உணர்வு, மொழியுரிமை உணர்வு, தன்னம்பிக்கை உணர்வு, தங்களுடைய மூதாதையர்கள் பற்றிய பெருமித உணர்வு, தங்களுடைய பண்பாட்டையும், நாகரிகத்தையும் பற்றிய பெருமித உணர்வு, தமிழன் என்ற எண்ணம், தமிழ்மொழி என்ற எண்ணம், தமிழ்நாடு என்ற எண்ணம் உருவாகிட முடியும், உருவாக்கப்பட முடியும்.

(8) இனிய நண்ப! காமராசரே! தமிழகத்தின் அரச பாரம்பரியத்தையும், குருபாரம்பரியத்தையும் சேர்ந்த பிறவித் தலைவரே நமது குருதேவர். தமிழ்மொழியிலும், ஆங்கில மொழியிலும், உலக அரசியல் துறையிலும், விஞ்ஞானத் துறையிலும், வரலாற்றுத் துறையிலும் தன்னிகரற்ற ஆழ்ந்த அறிவையும், செயல் சித்தாந்தத்தையும் பெற்றவர் நமது குருதேவர். ஒவ்வொரு கண்டத்தின் நோக்கையும் போக்கையும், அடிமைத்தனத்தையும் முறியடித்திட நிகழ்ந்திட்ட அமெரிக்காவின் உள்நாட்டுப் புரட்சி, இங்கிலாந்துக் காரர்களை எதிர்த்து நிகழ்த்திய போர், பிரஞ்சு நாட்டுப் புரட்சி, ஐரீசு நாட்டின் தன்மானப் புரட்சிப் போர், இங்கிலாந்தில் மக்களாட்சிக்காக நிகழ்த்தப்பட்ட போர்கள், உலகையே ஒரு குலுக்கு குலுக்கிய ரஷ்ய நாட்டில் திரு விளாதிமீர் இலிச் இலெனின் நிகழ்த்திய சமய, சமுதாய, அரசியல் புரட்சிகள், சீனாவில் மாசேதுங் நிகழ்த்திய மக்களின் எழுச்சிப் புரட்சிப் போர், இந்தியாவில் உயர்திரு மகாத்மா காந்தி அடிகளார் நிகழ்த்திய வினோதமான, வேடிக்கையான, புதுமையான தனிமனித விடுதலைப் போர் (அதாவது, "மகாத்மா காந்தியடிகள் கத்தியின்றி, இரத்தமின்றி

யுத்தமொன்று செய்தார்” என்று கவிதை பாடிடும் அளவிற்கு மகாத்மா காந்தியின் போர் இருந்தது. அதாவது இந்தியாவின் போர் முரசு கொட்டப்படவில்லை. விடுதலைக்காக வீரர்கள் ஒன்றுதிரட்டப்பட்டு பயிற்சியளிக்கப்படவில்லை. விடுதலைப் போருக்குரிய முழக்கங்கள் எழுப்பப்பட வில்லை, விடுதலைப் போரும் அறிவிக்கப்பட வில்லை) நாற்பது கோடி மக்களில் நாற்பது பேர்களுக்குக் கூட இந்தியாவில் விடுதலைப் போர் நடக்கிறது என்று தெரியாத நிலையில் வேடிக்கைக்குரிய வினோதமான இந்திய விடுதலைப் போர், ... முதலியவற்றை ஊன்றிப் படித்துத் தேர்ந்தவர்தான் நமது குருதேவர்.

(9) இனிய நண்ப! காமராசரே! **‘இந்து’** என்ற சொல் ஒரு தமிழ்ச் சொல்லாகும்; **‘இந்தியா’** என்ற சொல்லே தமிழ்ச் சொல்லாகும்; **‘இந்துமாக்கடல்’** என்ற சொல்லே தமிழ்ச் சொல்லாகும்; ‘மனு நீதி நூல்கள்’ (18) பதினெட்டும் தமிழில்தான் இருக்கின்றன; ‘இருக்கு வேதம்’, ‘அசுர வேதம்’ (யஜீர் வேதம்), ‘அதர்வான வேதம்’ (அதர்வண வேதம்), ‘யாம வேதம்’ (சாம வேதம்) என்ற நான்கு வேதங்களும் தமிழ்மொழியில்தான் இருக்கின்றன, இந்த நான்கு வேதங்களுக்கும் உரிய சுலோகங்கள் எனப்படும் சூலகங்கள் 4,42,368உம் தமிழ்மொழியில்தான் இருக்கின்றன. இந்துமத நூல்கள் (36) முப்பத்தாறும் தமிழ்மொழியில்தான் இருக்கின்றன.

தமிழ்நாட்டில் திருவிளையாடல் புரிவதற்காக அண்ட பேரண்டங்களிலிருந்து வந்திட்ட 64 சிவபெருமான்கள் அருளூறு அமுதத் தெய்வீகச் செம்மொழியான முத்தமிழ் மொழியில்தான் பேசினார்கள். இறைவனோடு இறைவனாக வாழ்ந்திட்ட 63 நாயன்மார்களும், அண்டபேரண்ட அருளுலக ஆட்சிமொழியுமான அருளூறு அமுதச் செம்மொழியுமான முத்தமிழ் மொழியில்தான் பாடினார்கள். கடவுளையே ஏவல் கொள்ளும் நிலையில் வாழ்ந்திட்ட 12 ஆழ்வார்களும் அண்டபேரண்டங்களை ஆளுகின்ற பதினெண்சித்தர்களுடைய தாய்மொழியான அருளூறு அமுதத் தெய்வீகச் செம்மொழியான

முத்தமிழில்தான் தமது பைந்தமிழ் பாசுரங்களைப் பாடினுர்கள் என்கின்ற பொழுது எப்படி அன்னிய மொழி; அதாவது கடவுளர்களும், நாயன்மார்களும், ஆழ்வார்களும் தெரிந்திடாத புரிந்திடாத அன்னிய மொழி பூசைமொழியாக அருட்சினை மொழியாக சடங்குகளைச் செய்யும் சாத்திர மொழியாக செல்வாக்குப் பெற்றிட்டது? செல்வாக்குப் பெற்றிட்டது?? செல்வாக்குப் பெற்றிட்டது???

எனவேதான், அரசியல்வாதிகள் கண்ணை மூடிக்கொண்டு மதம் அரசியலுக்கு வரக்கூடாதென்று கடுமையாக எதிர்க்கிருர்கள். ஆனுல், மதத்திற்கு சொந்தமான கோயில்களையும், கோயில் சொத்துக்களையும், கோயிலில் பணிபுரியும் பூசாறி, குரு, குருக்கள், குருமார், சாத்திரியார், தோத்திரியார், ஓதுவார், தேசிகர், பண்டாரம், அருட்சினையாளர், தீட்சிதர், பட்டர், .... முதலியவர்களுக்கு அரசாங்க விதிப்படி (அரசாங்கத்தில் L.D.C., U.D.C., D.T., T, = எழுத்தர், மேல்நிலை எழுத்தர், துணை தாசில்தர், தாசில்தார்) என்று சம்பள விகிதம் தரப்படுகிறதோ அந்த அளவுக்கு கோயில் ஊழியர்களுக்கு, பணியாளர்களுக்கு அவரவர் பணிநிலைக் காலத்தையொட்டி ஊதியத்தை, சம்பளத்தை உயர்த்திக் கொண்டே வர வேண்டும். இவர்களுக்கும் அரசாங்க அலுவலக ஊழியர்களுக்கும் இடையில் எந்தவித வேறுபாடும் இருக்கக் கூடாது. இவர்களில் 60 ஆண்டு நிறைந்தவர்கள் பணி நிலையிலிருந்து ஓய்வு பெறலாம் (Retirement). அப்படிப் பணிநிலையிலிருந்து ஓய்வு பெறுபவர்களுக்கு அவர்களது ஊதியக் கால கடைசியாண்டின் அடிப்படை ஊதியத்திற்கேற்ப (T.A., D.A., Allowance) போக்குவரத்துச் செலவு, அன்ருடப்படி, சிறப்பு ஊதியப் படி முதலியவைகள் தவிர அடிப்படை ஊதியத்திற்கேற்ப இவர்களுக்கு ஓய்வூதியம் (Retired pension) கொடுக்கப்பட்டேயாக வேண்டும்.

இதற்காக அதிக வருமானம் வரக்கூடிய கோயில்களில் வருமானத்தை பாதுகாப்பு சேமிப்பு நிதியாக பாதுகாத்து ஆண்டு முழுதும் கோயில் ஊழியர்களுக்கும், ஊழியக்காரர்களுக்கும்,

தொண்டூழியக் காரர்களுக்கும், பணியாளர்களுக்கும், கோயில் எடுபிடி வேலையாட்களுக்கும், கோயில் இசைக் கருவி இசைக்கும் இசையாளர்களுக்கும்; அரசாங்க வேலையாட்களுக்கு தருகின்ற ஊதியம் தரப்பட்டேயாக வேண்டும். அப்பொழுதுதான் நமது இந்துமதம் மறுமலர்ச்சி பெறும்! வளவளர்ச்சி பெறும்!! ஆட்சி மீட்சி பெறும்!!! மத உணர்வு விழிச்சியும், எழிச்சியும், செழிச்சியும் பெற்றிடும்.

இதற்காக உயர்நிலைப் பள்ளியிலே கோயில் கலை (Temple Arts), கோயிலில் பணி புரியும் விஞ்ஞானம் (Temple Service Science) என்று தனித்த பாடங்கள் (Special Subjects) புகுத்தப்பட வேண்டும். B.A., M.A. பட்டதாரிகளை [1]இந்துமதக் கோயில்களின் வரலாறு, [2]இந்துமதக் கடவுள்களின் வரலாறு (புராணம்); [3]இந்துமதக் கோயில் பூசை முறை, [4]இந்துமத சாத்தர சாத்திர சாத்திறங்கள்; [5]இந்துமதப் பெரியவர்கள், நாயன்மார்கள், ஆழ்வார்கள், அடிகளார்கள் ஆகியோரின் வாழ்வியல் சாதனைகள், போதனைகள்; [6]இந்துமதத்திற்கென முதன்மையாக உள்ள கோயில்கள் பற்றிய சிறப்பான வரலாறு; [7]இந்துமத நாயன்மார்கள், ஆழ்வார்கள் வரலாறு, [8]இந்துமதத்தில் சத்தி சித்தி முத்திகளைப் பெற்ற பத்தியாளர்களின் வரலாறு; ..... என்று இந்துமதம் பற்றிய நூல்களனைத்தும் நமது கல்விப் பாடத்திட்டத்திலேயே (In the curricular system of our Education) சேர்த்து விடுவோமேயானால்தான் இந்துமதம் வழியாக தமிழ்மொழியின் தெய்வீகத் தன்மை, கடவுள் தன்மை, அருளாற்றல் நிலைகள், தமிழ்மொழியின் மேன்மை, தொன்மை, திண்மை, நுண்மை, ... முதலிய உண்மைகள் தமிழ்நாட்டு மாணவர்களின் நெஞ்சத்திலே ஆழமாகப் பதிந்திடும்.

(10) இனிய நண்பா! காமராசர் அவர்களே! மேலே குறிப்பிடப்பட்ட செயல்திட்டங்கள் எல்லாம் நமது குருதேவரிடமுள்ள நூறுயிரக் கணக்கான திட்டங்களில் சிலதேயாகும். அதாவது, இந்துமதத்திற்கெனவே தனிப் பல்கலைக் கழகம் வைக்கின்ற அளவுக்கு சுமார் (10,000)

பத்தாயிரம் புத்தகங்கள் அச்சுக்குத் தயாராக இருக்கின்றன. ஆனால், நம் இந்துக்கள் கண்ணை மூடிக் கொண்டு கோயில் உண்டியல்களிலும், சித்துவிளையாடல் செய்கின்ற சாமியார்களிடமும், மோசடிக்கார வேடதாரிகளிடமும்தான் பணத்தைக் கொட்டுகிறார்கள். ஆனால், நமது குருதேவரோ சுமார் பத்து கோடி அறிக்கைகளையும், அறிவிக்கைகளையும் அச்சிட்டு தமிழகத்தில் வழங்கி இருக்கிறார். நூற்றுக்கும் மேற்பட்ட நூல்களை அச்சிட்டு வெளியிட்டுள்ளார். அடிக்கடி மின்னல் வேகத்தில் சுற்றுப்பயணம் செய்து கோடைக்கால மழை போல சொற்பொழிவுகளை நிகழ்த்தியிருக்கின்றார். ஆனால், பத்து கோடி பேர்கள் கூட இல்லாத தமிழர்கள் சிந்திக்க மறுக்கிறார்கள், நமது குருதேவரை சந்திக்க மறக்கிறார்கள்.

எனவேதான்! எனவேதான்!! எனவேதான்!!! .... நமது குருதேவர் தமது 60வது வயதில் இ.மு.க.வை (I.M.K.) இந்து வேத முன்னேற்றக் கழகத்தை ஓர் அரசியல் கழகமாக அறிவித்துச் செயல்பட முன் வந்துள்ளார்! அறிவித்துச் செயல்பட முன்வந்துள்ளார்!! அறிவித்துச் செயல்பட முன்வந்துள்ளார்!!! இப்படிப்பட்ட கால கட்டத்தில்தான் தாங்களும் தங்களுடைய நண்பர்களும் அறிமுகமாகியிருக்கிறீர்கள். எனவே, தாங்களும் தங்களது நண்பர்களும் ஓய்வும் வாய்ப்பும் கிடைக்கும் பொழுதெல்லாம் கீழவெளி வீதி 266 எண்ணில் கடையில் அமர்ந்திருக்கும் சித்தர் எண்வகையாரையும், மற்ற சன்னிதானங்களையும் சந்தித்துப் பேசுங்கள்! சந்தித்துப் பேசுங்கள்!! சந்தித்துப் பேசுங்கள்!!!

<u>குறிப்பு</u>:- அன்பு நண்ப! இந்த உலகில் மிக சின்னஞ்சிறு நாடாகிய இங்கிலாந்து ஆதவன் மறையாத பேரரசை (The Sun never set in the British Empire) உருவாக்கினார்கள் என்றால்; அவர்களிடையே இருந்த ஒழுங்கும், கட்டுப்பாடும்தான். அதுபோல நமது இ.மு.க. ஒழுங்கையும், கட்டுப்பாட்டையும் கடைப்பிடிக்கிறது. அதாவது, தாங்கள் அஞ்சல் அனுப்பவதானாலும் சரி, சென்னைக்கு குருதேவரைப் பார்க்க வருவதானாலும் சரி, மதுரை கீழவெளி வீதி 266இல் இருக்கக்

கூடிய சித்தர் எண்வகையாரை சந்தித்து அவருடைய கையொப்பத்தையாவது, பரிந்துரையையாவது பெற்றுத்தான் செயல்பட வேண்டும். அதாவது, தென்மண்டலம் முழுவதும் சித்தர் எண்வகையார் த.கேசவன் B.Com., அவர்களிடம்தான் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. ஆனால், செயலில் தமிழ்நாடு முழுவதுமே அவருடைய நேரடிப் பார்வையில் எல்லா நிகழ்ச்சிகளும் நிகழ்த்தப்படுகின்றன. எனவே, தாங்கள் அவரைச் சென்று கண்டு நமது வளர்ச்சிக்குரிய செயல்திட்டங்களை தெரிந்து, புரிந்து உங்களனைவருடைய ஒத்துழைப்பையும் தர வேண்டும்.

(11) அன்பு நண்ப காமராசரே! நமது குருபீடம் தாங்களும் தங்களுடைய நண்பர்களும் மதுரை மாநகருக்குள் பலநூறு மெய்ஞ்ஞானக் கொடிகளை ஏற்ற வேண்டும். ஒவ்வொரு மெய்ஞ்ஞானக் கொடிக்கு அருகிலும் ஒரு திரிசூலம் நட்டு அகல்விளக்கு மாடமும் அமைக்கப்பட வேண்டும். அப்பொழுதுதான் நாம் ஏற்றும் மெய்ஞ்ஞானக்கொடி அருளாட்சிக்குரிய கொடியாகும்.

(12) அன்பு நண்ப காமராசர் அவர்களே! கீழ மாசி வீதியிலிருக்கும் சித்தர் எண்வகையார் நமது இ.மு.க.வின் உறுப்பினர் அட்டை வைத்திருக்கிறார். ஒவ்வொரு உறுப்பினருக்கும் ரூ.2/-தான் சந்தாத் தொகை. ஒவ்வொரு உறுப்பினர் அட்டையிலும் 10 சந்தாதாரர்களை சேர்க்கலாம். இந்த அட்டைகளை வாங்கி குடும்பத்திலுள்ள எல்லோரையுமே இ.மு.க. உறுப்பினராக ஆக்கும் முயற்சியில்; நீங்களும் உங்களுடைய நண்பர்களும் ஈடுபடுவீர்களேயானால்; நமது குருதேவர் தலைவர், ஞானவேந்தர், அந்தணர் அண்ணல், ஞானாச்சாரியார் டிசம்பர் மாதம் மதுரை வருவதற்குள் பல்லாயிரக்கணக்கான உறுப்பினர்களைச் சேர்த்திட முடியும். இதுவரை நமது இ.மு.க. வெளியிட்டுள்ள நூல்களையெல்லாம் வாங்கி நீங்களும் நமது நண்பர்களும் நன்றாகப் படித்துக் கொள்ள வேண்டும். அதாவது, உங்களிடமோ, நமது நண்பர்களிடமோ யார் எந்த வினாவை

எழுப்பினாலும் சரி, உடனுக்குடன் பதில் வழங்கப்பட்டேயாக வேண்டும்! பதில் வழங்கப்பட்டேயாக வேண்டும்!! பதில் வழங்கப்பட்டேயாக வேண்டும்!!! இதைத்தான் நமது இ.மு.க.வின் தலைவர், ஞானத்தந்தை, குருதேவர், அந்தணர் அண்ணல், ஞானாச்சாரியார் அவர்கள் எதிர்பார்க்கிறார்கள்! எதிர்பார்க்கிறார்கள்!! எதிர்பார்க்கிறார்கள்!!! விரிவஞ்சி இந்த அஞ்சலை இத்தோடு நிறைவு செய்கிறோம்.

<u>குறிப்பு</u>:- இந்த அஞ்சலுக்கு தங்களால் முடிந்தவரை நிறைய செராக்சு (Xerox) நகல்கள் எடுத்துப் பலருக்கும் தாருங்கள். தலைமைப்பீடத்திற்கு சுமார் 30க்கும் மேற்பட்ட நகல்களை அனுப்பி வைத்தால்; நாடு முழுவதுமுள்ள நமது பழைய நண்பர்களுக்கு, புதிய நண்பர்களுக்கு உங்களைப் பற்றிய செய்தியும், உங்களின் முதன்மை நிலைமையும், உங்களுக்கென குருதேவர் கூறிய கருத்துக்களின் செறிவையும் எல்லோரும் தெரிந்து கொள்வார்கள். அதன்மூலம், நமது இ.மு.க.வைச் சார்ந்தவர்களுக்கிடையே தங்களுடைய பெயர் விரைவில் அறிமுகமாகிடும்.

<u>சிறப்புக் குறிப்பு</u>:- முடிந்தால் உங்களுக்காக எழுதப்பட்ட இந்த அஞ்சல் ஓலையை சிறிய புத்தகமாகவே சித்தர் எண்வகையார் மூலம் அச்சிட்டு வெளியிட்டு விடலாம். விலை ரூ. 3/- (அ) ரூ. 5/- என்று போட்டு நம்மவர்களுக்கிடையே நன்கு விற்றிடலாம். அன்புகூர்ந்து இதைச் செயலாக்க முற்படுங்கள் முடிந்தால்.

மற்றவை நேரில் அல்லது அஞ்சல் வழியாக குருதேவரைச் சந்திக்கலாம்.

ஓம் திருச்சிற்றம்பலம் ஓம்!
தென்னாடுடைய சீவனே போற்றி!
எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி!

***<u>அஞ்சல் ஓலைநாயகம்:</u>***

அருள்மிகு ஆத்தாள் தேவி இருக்கன்குடி மாரியம்மன் சன்னிதானம்
அருள்மிகு தாத்தா மதுரைப் பாண்டிமுனீசுவரர் பண்டார சந்நதி,
அருள்மிகு ஆத்தாள் தேவி திருமங்கலம் பத்தர காளியம்மன் பீடாதிபதி,
அருள்மிகு தாத்தா திருப்பரங்குன்றம் முருகப்பெருமான் ஆதீனம்,
திருமங்கலம் பெரியவாள்,
சித்தரடியார் நா. வேல்மணி,
4, சோமசுந்தரம் தெரு, திருமங்கலம், மதுரை - 626706.

16-8-1995 to 17-8-1995

**ஒப்பம்**
**தலைவர், குருதேவர், ஞானத்தந்தை,**
**அந்தணர் அண்ணல்,**
**ஞானாச்சாரியார்.**
**17-8-1995.**

**//உண்மை நகல்//**
**//மூலம்: கையெழுத்துப் பிறதி நகல். அஞ்சலின் இறுதியில் குருதேவர் அவர்களின் கையொப்பம் இருந்தது. இந்த நகலின் முதல் பக்கம் மட்டும் கிடைக்கவில்லை.//**



11வது பதினெண்சித்தர் பீடாதிபதி



மெய்ஞ்ஞானக்கொடி



12வது பதினெண்சித்தர் பீடாதிபதி

12வது பதினெண்சித்தர் பீடாதிபதியாகத் திருத்தோற்றம் எடுத்த ஞானாச்சாரியார் ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூறார் அவர்களின் குருவாணைப்படி இந்துவேத இலக்கியங்கள் இதில் வெளியிடப்படுகின்றன. இவை ஞாலகுரு அவர்கள் அமைத்திட்ட கையெழுத்துப் பிறதி நூலகங்களில் தாள் நைந்து, எழுத்து மங்கிக் கொண்டிருக்கும் நகல்களின் பிறதிகளாகவே வழங்கப்படுகின்றன.

**குருபீடம் அந்தணர் அண்ணல் ஞானாச்சாரியார் அவர்கள்**

இந்துக்களிடையே ஒற்றுமையுணர்வு, பற்றுணர்வு, தோழமையுணர்வு, நட்புணர்வு, ஒன்றி ஊறிச் செயல்படும் பண்பு; இந்துமதத்தின் மீது நம்பிக்கை; இந்துமத நிறுவன நிர்வாகங்களின் மீது மதிப்பு; இந்துமத மறுப்பாளர்களை வெறுப்பாளர்களை எதிர்ப்பாளர்களை எல்லாம் சந்தித்திடும் துணிவு; இந்துமத மடமைகளையும் போலிகளையும் காலிகளையும், .... கண்டித்துத் திருத்தும் தெளிவு; இந்துமத புராண ஆபாசங்களை வரலாற்று அடிப்படையில் மறுத்து விளக்குதல்; இந்து வேதத்தை இந்துக்கள் எல்லோரும் தெரிந்து கொள்ளச் செய்தல்; ... முதலியவற்றை உருவாக்கிட விரும்புகிறார்.

Published under the Divine Grace of His Holiness the 12th Pathinensiddhar Peedam, Gurudevar, Gnaalaguru Siddhar Arasayogi Karuvooraar by the **Anaathi Sankaraachaariyaar Peedam** Trust, (Regd) East Tambaram, Chennai. Printed by Mr Sivaraman, Kamarajapuram, East Tambaram. Cell: 09972130609 at Sri Vignesh Printers, Madurai.

https://newsletters.gurudevar.org
https://gurudevar.in
https://induism.org
https://books.gurudevar.org
https://gurudevar.org
Email: indhuism@gmail.com

காணிக்கை : ரூ15/-